


நகரசபை
Seafaring Town Of Valvai
வல்வெட்டித்துறை

வல்வையின் கடலோடிச் சாதனை படைத்த வீர மறவர்களின் “வல்வெட்டித்துறைக் கடலோடிகள்” என்ற நூலை வெளியிடுவதற்கு எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வல்வையின் நூல் வெளியீட்டில் இன்னுமொரு மைல் கல்

வல்வெட்டித்துறையில் காலம் காலமாக திரை கடலோடி ஊருக்கும், முழு இலங்கைக்கும் திரவியம் தேடிக் கொடுத்த வல்வெட்டித்துறையின் கடலோடிகள் தொடர்பான வரலாற்று ஆவணமாகத் தொகுக்கப்பட்ட “வல்வெட்டித்துறைக் கடலோடிகள்” என்ற நூல் திரு.விஸ்ணுசுந்தரம் அருட்செல்வம் அவர்களின் முயற்சியினால் கனடாவில் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது என்பது வல்வையர் ஒவ்வொருவரும் பெருமைப்படவேண்டிய விடயம்...

வல்வெட்டித்துறை மண் நீண்ட காலமாகத் தமிழர் வரலாற்றில் சாதனை படைத்து வரும் மண். எவருக்கும் எந்த இடத்திலும் நீதிக்காகவே போராடிவரும் புண்ணியபூமி என்பதை உலகம் பார்த்து வியந்திருக்கின்றது. அதற்கு கடலோடு சார்ந்த எம்மவரின் வாழ்வு தான் காரணம் என்பதை எமது மக்களின் கப்பல் கட்டும் கலையும், வீரமுடன் கடலோடி வாழ்ந்த வாழ்வும் வரலாற்றில் தடம் பதித்திருந்த வீர வரலாறுகள்....

ஆனால் இன்று எங்களுடைய இளைய சந்ததியினர் அவற்றை அறியும் வாய்ப்பை இழந்திருந்த நிலையில் வல்வையின் கடலோடிச் சாதனை படைத்த எமது வீர மறவர்களின் வரலாறுகளைத் தொகுத்து முழுமையாக அறியும் வகையில் “தமிழ்நீ.பொன். சிவகுமரன்” அவர்கள் தொகுத்து வழங்கிய தகவல்களின் அடிப்படையில், ஈழத்துப் பூராடனாரால் எழுதப்பட்ட “வல்வெட்டித்துறைக் கடலோடிகள்” என்ற அரியதொரு நூலை திரு.விஸ்ணுசுந்தரம் அருள்செல்வம் வெளியிட்டு வைத்ததையிட்டு எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். சாதனையாளர்கள் வரிசையில் விளையாட்டுத்துறையில் சாதனை படைத்தவர்களின் வரலாறுகள் எம்மவரால் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள இந்த நேரத்தில் கடலோடிச் சாதனை புரிந்து எமது வல்வெட்டித்துறை மண்ணுக்குப் பெருமை சேர்த்த அந்த மாமனிதர்களின் வரலாறுகள் இன்றைய சந்ததியினராலும், நாளைய சந்ததியினராலும் நினைவு கூரத்தக்க வகையில் “வல்வெட்டித்துறைக் கடலோடிகள்” நூல் வெளிவந்துள்ளது.

தமிழ் நீபொன்.சிவகுமரனதும், ஈழத்துப் பூராடனாரினதும் நீண்ட கால முயற்சியின் அறுவடையை இன்று வல்வை மக்களும்,உலகத் தமிழர்களும் அனுபவிக்கப் போகின்றனர். இந்த நூல் வல்வையர்களின் வீடுகளை மட்டுமல்ல தமிழ்த் தாயை நேசிக்கின்ற ஒவ்வொருவர் கரங்களையும், வரலாற்று ஆய்வுகளை மேற்கொள்ளும் ஒவ்வொருவர் இல்லங்களையும் அலங்கரிக்கவேண்டும். இந்த முயற்சியில் முன்னின்று உழைத்து இந்த அரிய வரலாற்று ஆவணத்தை எங்கள் சந்ததியின் எதிர்கால வாழ்வுக்குரிய உந்து சக்தியை வழங்கியிருக்கும் அதன் ஆசிரியர் ஈழத்துப்பூராடனாருக்கும், விஸ்ணுசுந்தரம் அருள் செல்வம் அவர்களுக்கும், வல்வையின் வரலாற்று ஆவணத்தைத் தொகுத்து சிறந்த கட்டுரைகளை எழுதிவரும் பொன் சிவகுமரன் அவர்களுக்கும் வல்வெட்டித்துறை மக்களின் சார்பில் எனது நன்றியையும் வாழ்த்துக்களையும்தெரிவித்துக்கொள்கின்றேன்..

இது போன்ற ஆவணப்படுத்தும் முயற்சிகளை எமது புலம் பெயர்ந்த உறவுகள் மேலும் முன்னெடுத்து, வல்வெட்டித்துறை மண்ணின் பெருமைகளை உலகுக்கு எடுத்துக் காட்ட முன்வரவேண்டும் என்ற எனது இந்த வேண்டுகைகளை புலம் பெயர்ந்து வாழ்ந்து வல்வைமண்ணின் அபிவிருத்தியைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கின்ற எனது உறவுகளுக்குக்காணிக்கையாக்கி வல்வெட்டித்துறை மண் வெகு விரைவில் இழந்த அனைத்தையும் பெற்று இலங்கை வரைபடத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொள்ளும் என்ற நம்பிக்கையுடன் ஒளிமயமான எதிர்காலத்திற்காக நாம் ஒவ்வொருவரும் ஒன்றுபட்டு உழைப்போமாக.

நடராஜா அனந்தராஜ், நகர பிதா,
வல்வெட்டித்துறை நகராட்சிமன்றம்